[2003 ஏப்ரல் 28

349—

உதவித்தொகை

***10722—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் விவசாயப் பணியின்போதும், குடிசைகளில் வசிக்கும் போதும் விஷப்பாம்பு கடித்து இறந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) விஷப்பாம்புகளைப் பிடித்து வனத் துறை மூலம் அடர்ந்த காடுகளில்விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) சிறப்புத் திட்டத்தின்கீழ் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் உதவித்தொகை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) தஞ்சை, திருவாரூர், நாகை போன்ற மாவட்டங்களில் விஷப்பாம்பு மற்றும் நல்ல பாம்புகள் கடித்து விவசாயப் பணிபுரியும்போதும், குடிசைகளில் வசிக்கும்போதும் இறந்தவர்களின் எண்ணிக்கை வனத் துறையிடம் இல்லை. விஷப்பாம்புகள் இருப்பது குறித்து தகவல் தெரிவிக்கப்படும்போது, அப்பாம்புகளைப் பிடித்து காடுகளில் விடும் பணியை மட்டும் வனத் துறை மேற்கொண்டு வருகிறது. சிறப்புத் திட்டத்தின்கீழ் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் ஏதும் வனத் துறையிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மூன்று கேள்விகளுக்குமே இல்லையென்ற பதிலை அளித்திருக்கிறார்கள். இந்தக் கேள்விகளே நான்கு தடவை வந்து வந்து—புற்றிலிருந்து பாம்பு தலையை எட்டிப் பார்ப்பது போல வந்து வந்து, இன்றைக்குத்தான் அது வெளிப்பட்டிருக்கிறது. ஆனாலும் பதில் திருப்திகரமாக இல்லாமல்

2003 ஏப்ரல் 28]

இருக்கிறது. அநேகமாக இது வருவாய்த் துறை மூலமாக வர வேண்டியிருக்கும் என்ற காரணத்தால் அப்படி ஒரு பதிலை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாம்பை வெளியே விடக்கூடாது என்பதால்தான் வந்து போய்க்கொண்டிருக்கிறது. (சிரிப்பு)

முற்பகல் 10-30

திரு. வை. சிவபுண்ணியம்: நல்லவேளை கடிக்காமல் விட்டுவிட்டது என்பதுதான் மகிழ்ச்சி.

குறிப்பாக, விவசாய மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலே உள்ள விவசாயத் தொழிலாளர்கள், ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள்தான் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே இந்த விஷப் பாம்பு கடித்து இறக்கிற அந்த நிலைமைகளைப் போக்க வேண்டும் என்பதற்கான முயற்சியின் அடிப்படையிலேயும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்ற அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயும்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் வனத் துறையின் மூலமாக எந்தப் பதிலும் இல்லையென்று சொல்கிறார். பாம்புக்குப் பொறுப்பு வனத் துறைதான். ஆனால் நிவாரணத்திற்குப் பொறுப்பு வருவாய்த் துறையாக இருக்கிறது. இரண்டு துறைகளும் கலந்து பேசி, நிவாரணம் வழங்குவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று கேள்விகளுக்கும் இல்லையென்று பதில் சொன்னேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இரண்டாவது கேள்விக்கு பாம்பை பிடித்து காட்டில் விடப்படும்; அதாவது எங்கெங்கு பாம்பு இருக்கிறது என்று தெரிந்தால் அதை வனத் துறை பிடித்து, காடுகளில்—காப்புக் காடுகளில் விடும். அதைத்தான், இரண்டாவது கேள்விக்குப் பதிலாகச் சொல்லியிருந்தேன். மேலும் பாம்பு கடித்து இறந்தவர்களுக்கு நிதி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நம் புரட்சித் தலைவி அரசு இதைப்பற்றிச் சிந்திக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விஷப் பாம்புகளைப் பிடித்து வனத் துறை மூலம் அடர்ந்த காடுகளில் விடப்படுமா என்ற இரண்டாவது கேள்விக்கு, தகவல் கிடைத்தால் அதைக் கண்டுபிடித்து காடுகளில் விடப்படும் என்று சொல்கிறார். பாம்பு இருக்கிற இடத்தைக் குறித்து complaint செய்து பின்னர் வனத் துறை போய்ப் பிடித்து விடுகிற வரைக்கும் பாம்பு அந்த இடத்திலேயே இருக்குமா என்பது கேள்வி. அடுத்தது, பாம்புபற்றிப் பேசுகிறபோது, துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டார்கள், கடிக்காமல் விட்டதே பரவாயில்லை என்று. என்னுடைய வருத்தம், குறைந்தபட்சம் சிறக்கூட இல்லை, ஏன்?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாம்பு அவ்விடத்தில் இருக்குமா என்று கேட்டார். ஆனால் நாங்கள் வனத் துறை மூலமாக பாம்பு இருந்த இடத்தை—எங்கு தெரிவிக்கப்பட்டதோ—குறிப்பாக மயிலாடுதுறையில் N.P.K.R. இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் 450 பாம்புகள் இருந்து அவை பிடிக்கப்பட்டு, குற்றாலம் காப்புக் காட்டில் விடப்பட்டிருக்கின்றது. அதேபோல, Tamil Nadu Newsprint and Paper Mills Limited காகிதபுரம்—கரூரில், தொல்லை கொடுத்து வந்த 128 பாம்புகளைப் பிடித்து, அதாவது மகாபலிபுரத்திலுள்ள இருளர் பாம்பு பிடிக்கும் நிறுவனத்தின் மூலம் 5-7-2001 அன்று பிடிக்கப்பட்டு, அந்தப் பாம்புகள் கொல்லிமலை காப்புக் காட்டில் விடப்பட்டுள்ளன. அதேபோல, எங்கு பாம்பு இருக்கிறது என்று தெரிவித்தால், உடனே வனத் துறை மூலமாக, மக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் அதைப் பிடித்து காப்புக் காட்டில் விடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 350, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.